# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY

(With UGC 2(f) & 12(B) status and NAAC Accredited with 'A' grade in 1st cycle)

(Established under Tamil Nadu Act 33 of 2008)

Gangaiyammankoilstreet,Karapakkam, Chennai - 600 097.

Website: www.tnteu.ac.inE-mail: eligibility@tnteu.ac.in


**No.TNTEU/Eligibility/B.Sc.B.Ed/B.A.B.Ed./2025-26/449** **Date: 28.08.2025**

முனைவர்.**க.இராஜசேகரன்**, பி.எச்.டி,
பதிவாளர் (பொ)

**Web Post**

பெறுநர்:

முதல்வர்கள்
இணைவுபெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்
(B.Sc.B.Ed/B.A.B.Ed. பட்டவகுப்புகள்)
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

அய்யா/அம்மையீர்,

பொருள்: TNTEU- இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகள் - B.Sc.B.Ed/B.A.B.Ed. பட்டவகுப்புகள் – 2025-2026-ஆம் கல்வியாண்டு – கல்லூரியில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் அசல் கல்விச்சான்றிதழ்களை ஆய்வுசெய்யும் முகாம் (Certificate verification camp) – தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

*****

மேற்காண் பார்வையின் படி, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றுள்ள கல்வியியல் கல்லூரிகளில் 2025-2026-ஆம் கல்வியாண்டில் B.Sc.B.Ed/B.A.B.Ed. பட்டவகுப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு சேர்க்கைத்தகுதி ஒப்புதல் (Eligibility of Admission) பட்டியல் வழங்கும்பொருட்டு, அம்மாணவர்களின் அசல் கல்விச்சான்றிதழ்களை சரிபார்ப்பதற்கு கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாட்களில் காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை பல்கலைக்கழகத்தால் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

| வ.எண் | நாள் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | 02.09.2025 | தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், திண்டுக்கல், காஞ்சிபுரம், கடலூர் |
| 2 | 03.09.2025 | ஈரோடு, நாகப்பட்டினம், நாமக்கல், தஞ்சாவூர், திருவாரூர் |

எனவே, கல்லூரி முதல்வர்கள் மேற்குறிப்பிட்ட அட்டவணையின்படி இப்பல்கலைக்கழத்தில் நடைபெறும் மாணவர்களின் அசல் கல்விச்சான்றிதழ்களை சரிபார்க்கும் ஆய்வு முகாமில் கலந்து கொள்வதற்கு, இத்துடன் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் (வழிகாட்டு நெறிமுறைகள்) பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

K. R... 28/8/25

பதிவாளர்(பொ)

இணைப்பு: இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகள் - சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்

# இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகள், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்

அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகளும், பல்கலைக்கழகத்தில் அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பு நாள் அன்று, கீழ்க்கண்ட ஆவணங்களை அவசியம் சமர்ப்பிக்கவேண்டும் என நினைவூட்டப்படுகிறது.

1. கல்லூரியில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு ஏற்ப பல்கலைக்கழகம் இணைய தளம் வாயிலாக செலுத்தப்பட்ட தகுதி கட்டணத்திற்கான இரசீதை (eligibility fees receipt) கல்லூரி letter pad-ல், covering letter உடன் இணைக்கவும்.
2. தேசிய ஆசிரியர் கல்விக்குழுமத்தில் (NCTE) இருந்து பெறப்பட்ட முதல் மற்றும் Continuation of Recognition Order (***Issued after the year 2018***) ஆணையின் நகல்.
3. 2025-2026 – ம் கல்வியாண்டிற்கு பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட இணைவு / தொடர் இணைவு (Provisional/Continuation of Provisional Affiliation) ஆணையின் நகல்.
4. B.Sc.B.Ed./B.A.B.Ed. பட்டப்படிப்புகளுக்கு NCTE விதிப்படி ஒப்புதல் அளித்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழகம் அண்மையில் வழங்கிய தகுதி ஒப்புதல் (Staff approval order) ஆணையின் நகல்.
5. தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழகம் வழங்கிய தகுதி ஒப்புதல் (Staff approval order) ஆணையின் நகலுடன் ஆசிரியர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண்ணை இணைக்கவும்.
6. மாணவர்கள் பூர்த்தி செய்து, சேர்க்கைக் குழுவால் மாணவர்களின் கல்வித் தகுதி சரிபார்க்கப்பட்டு, முதல்வர் கையொப்பமிட்ட விண்ணப்பங்கள் ஒவ்வொன்றுடனும், முதல்வர் சான்றொப்பமிட்ட கல்வி, மாற்றுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ், ஆதார் அட்டையின் நகல்களை இணைக்கவும்.
7. அரசு மற்றும் பல்கலைக்கழக விதிப்படி, சேர்க்கை செய்யப்பட்ட அனைத்துத் தகுதியான மாணவர்களின் (qualified students) அசல் (original) கல்விச் சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ்கள் மற்றும் பிற சான்றிதழ்கள் சமர்ப்பிக்கவேண்டும்.
8. இணையதளத்திலிருந்து ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியே பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் (Individual online Admission Application Printouts) சமர்ப்பிக்கவேண்டும்.
9. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல் (Form-A)
10. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் தகுதிப் பட்டியல் (Form-B)
11. சேர்க்கைப் பட்டியலில் உள்ள ஒவ்வொரு மாணவர்களின் EMIS/UMIS எண்களை கட்டாயம் சமர்பிக்க வேண்டும்.

மேலும், அசல் சான்றிதழ் சரிபார்ப்புப் பணி விரைவாக முடிக்க ஏதுவாக, ஒவ்வொரு மாணவனின் **அசல் சான்றிதழ்களை** - Community certificate, SSLC - Mark sheet, HSC / Intermediate Mark sheet and TC, - என்றவாறு வரியைப்படுத்தி தயாராக எடுத்து வருமாறு அறிவுறுத்தலாகிறது.

சரிபார்ப்பு முடிந்த அன்றே, அசல் கல்வி சான்றிதழ்கள் மற்றும் சாதிச்சான்றிதழ்களைத் திரும்பப் பெற்றுச் செல்ல வேண்டும் எனத் தெரிவிக்கலாகிறது. தவறினால் பல்கலைக்கழகம் எவ்விதத்திலும் பொருப்பேற்காது.

***இச்சுற்றிக்கையானது, NCTE Recognition ஆணை,பல்கலைக்கழகத்தின் 2024-2025-ஆம் ஆண்டுக்கான இணைவு/தொடர் இணைவு ஆணை(provisional continuation of provisional affiliation & Staff Approval order ) பெறாத கல்வியியல் கல்லூரிகளுக்கு எக்காரணத்தைக் கொண்டும் பொருந்தாது.***